தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### முதல்போக பாசனத்துக்காக முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் திறப்பு



முல்லைப் பெரியாறு அணையிலிருந்து முதல் போக பாசனத்துக்காக தண்ணீரை திறந்து வைத்து மலர் தூவிய அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம். உடன், ஆர்.பார்த்திபன் எம்.பி., மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி, தங்க.தமிழ்செல்வன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர்.

**கம்பம்,**

முல்லைப் பெரியாறு அணையிலிருந்து முதல்போக பாசனத்துக்காக தண்ணீரை நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

பெரியாறு அணையிலிருந்து முதல்போக பாசனத்துக்காக தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி கேரள மாநிலம் தேக்கடியில் நடைபெற்றது. கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சார்பில் சர்வமத முறைப்படி சிறப்பு பூஜை, வழிபாடு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சிறப்பு பூஜைகளில் கலந்து கொண்டு தமிழக நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தண்ணீரில் மலர்தூவினார்.

நிகழ்ச்சியில் ஆண்டிபட்டி சட்டப் பேரவை உறுப்பினர் தங்க.தமிழ்செல்வன், பெரியகுளம் சட்டப்பேரவை உறுப்பினர் ஏ.லாசர், மாவட்ட ஆட்சியர்

கே.எஸ்.பழனிச்சாமி, தேனி மக்களவை உறுப்பினர் ஆர்.பார்த்திபன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பின்னர், தேக்கடியில் உள்ள பெரியாறு அணையிலிருந்து, தமிழகத்துக்கு தண்ணீர் செல்லும் சுரங்கத்தின் மதகை நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் காலை 11 மணிக்கு திறந்து வைத்தார். அணையின் நீர்மட்டம் 113.80 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 100 கன அடியாகவும், அணையிலிருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 200 கன அடி தண்ணீர் பாசனம் மற்றும் குடிநீருக்காகவும் திறந்து விடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 1,526 மில்லியன் கனஅடியாக இருந்தது.

கம்பம் பள்ளத்தாக்கில் முதல்போக பாசனம்: மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் பதிவு பெற்ற உத்தமபாளையம், போடி மற்றும் தேனி வட்டங்களைச் சேர்ந்த 14,707 ஏக்கர் நிலத்திற்கு முதல்போக பாசனத்துக்கும், மாவட்டத்தின் குடிநீர் தேவைக்காகவும் 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் 120 நாள்களுக்கு தொடர்ந்து திறந்து விடப்படும் என பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர் மின் உற்பத்தி இல்லை: லோயர்கேம்ப் பெரியார் மின் உற்பத்தி நிலையத்தில் கடந்த மார்ச் முதல் வாரத்தில் மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதால், மின் உற்பத்தி செய்யப்படாமல், அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் சுரங்கத்தின் வழியாக வந்து, இறைச்சல் பாலத்தின் வழியாக லோயர்கேம்பில் முல்லைப் பெரியாற்றில் நேரடியாக திறந்து விடப்படுகிறது.

வழக்கமாக திறந்து விடப்படும் தண்ணீரில் லோயர்கேம்ப் பெரியாறு மின் உற்பத்தி நிலையத்தில் மின் உற்பத்தி செய்வது வழக்கம், இந்தாண்டு குறைவாக தண்ணீர் திறப்பதால் மின் உற்பத்தி துவங்கவில்லை, சில நாள்களில் மின் உற்பத்தி துவக்கப்பட உள்ளதாக மின் வாரியத்தினர் தெரிவித்தனர்.

விவசாயிகள் மகிழ்ச்சி: கடந்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு, முல்லைப் பெரியாறு அணையிலிருந்து காலதாமதம் இல்லாமல், முதல்போகத்திற்கு ஜூன் முதல் தேதியில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவித்தனர்.

## <u>பெருங்கால் பாசன கார் சாகுபடிக்காக மணிமுத்தாறு அணை திறப்பு</u>



மணிமுத்தாறு பெருங்கால் மதகிலிருந்து தண்ணீரைத் திறந்து விட்ட அமைச்சர் பூ.செந்தூர்பாண்டியன்.

**அம்பாசமுத்திரம்,**

பெருங்கால் பாசன கார் பருவ சாகுபடிக்காக மணிமுத்தாறு அணையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. கார் சாகுபடிக்கு மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று விவசாயிகள் விடுத்த கோரிக்கையை ஏற்று அணையைத் திறக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதன்பேரில் மணிமுத்தாறு பெருங்காலில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் கருணாகரன் தலைமை வகித்தார். இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பூ.செந்தூர்பாண்டியன் தண்ணீரைத் திறந்து விட்டார். மாநிலங்களவை உறுப்பினர் முத்துக்கருப்பன், திருநெல்வேலி மக்களவைத் தொகுதி உறுப்பினர் பிரபாகரன், தென்காசி மக்களவைத் தொகுதி உறுப்பினர் வசந்தி முருகேசன், மாநிலங்களவை உறுப்பினர் விஜிலா சத்தியானந்த், இசக்கி சுப்பையா எம்.எல்.ஏ., தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் முருகையா பாண்டியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மணிமுத்தாறு பெருங்கால் மூலம் அணையிலிருந்து 40 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையிலிருந்து பாசனத்துக்காக 105 நாள்கள் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு மொத்தம் 554.25 மில்லியன் கன அடிக்கு மிகாமல் இருக்கும். இதன்மூலம் ஜமீன் சிங்கம்பட்டி, அயன் சிங்கம்பட்டி, வைராவிகுளம், ஏர்மாள்புரம், தெற்கு பாப்பான்குளம், மூலச்சி மற்றும் தெற்கு கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த 2756 ஏக்கர் விவசாய நிலம் நேரடி மற்றும் மறைமுகமாக பயன் பெறும்.

## வேலூரில் 106 டிகிரி வெயில்



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் ஞாயிற்றுக்கிழமை 106 டிகிரி வெயில் பதிவானது.

ஜூன் மாதம் பிறந்த பின்னரும் வெயிலின் உக்கிரம் தொடர்கிறது. தமிழகத்தின் பல நகரங்களில் 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் பதிவாகி வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை வேலூரில் அதிகபட்சமாக 106 டிகிரி பதிவானது. சென்னை, தருமபுரி, கரூர் பரமத்தி, மதுரை, திருச்சி, பாளையங்கோட்டை, சேலம் உள்ளிட்ட இடங்களிலும் 100 டிகிரிக்கும் மேல் வெயில் பதிவானது.

ஞாயிற்றுக்கிழமை பதிவான வெயில் அளவு

(டிகிரி பாரன்ஹீட்டில்):

வேலூர் 106

திருச்சி 104

கரூர் பரமத்தி, மதுரை 103

சேலம், பாளையங்கோட்டை 102

சென்னை (மீனம்பாக்கம்) 101

சென்னை (நுங்கம்பாக்கம்) 98

தருமபுரி 100

புதுச்சேரி 99

கோவை 96

கொடைக்கானல் 73

## தடைக்காலம் முடிந்து கடலுக்குச் சென்ற மீனவர்களுக்கு ஏராளமான மீன்கள் சிக்கின



45 நாள்களுக்கு பிறகு மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடித்து வந்ததால் திருவிழா கூட்டம்போல் காட்சியளிக்கும் ராமேசுவரம் துறைமுக பகுதி

**ராமேசுவரம்,**

மீன்பிடி தடைக்காலம் முடிந்து 45 நாள்களுக்கு பிறகு கடலுக்கு சென்ற ராமேசுவரம் மீனவர்கள் வலையில் சிக்கிய ஏராளமான மீன்கள் அதிக விலைக்கு விற்பனையானதால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழக கடல் பகுதியில் மீன்களின் இனப்பெருக்கத்துக்காக விதிக்கப்பட்டிருந்த 45 நாள்கள் தடைக்காலம் முடிந்த நிலையில், ராமேசுவரம் மீனவர்கள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் 770 படகுகளில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். மீன்பிடித்து விட்டு ஞாயிற்றுக்கிழமை கரை திரும்பினர்.

45 நாள்கள் கழித்து மீன்பிடிக்கச் சென்றதால் மீனவர்களின் வலையில் அதிக அளவில் இறால், கணவாய், நண்டு, திருக்கை மீன் உள்ளிட்ட பல வகை மீன்கள் சிக்கின. ஒவ்வொரு படகிலும் தலா 40 கிலோ முதல் 200 கிலோ வரை இறால்கள் பிடிபட்டன. உயிருடன் கூடிய நண்டுகள் 10 முதல் 15 கிலோ வரையிலும் சிக்கின.

மீனவர்கள் வலையில் சிக்கிய இறால், உயிர் நண்டு, கணவாய் போன்ற ஏற்றுமதித் தரம் வாய்ந்த உயர் ரக மீன்களை கரையில் காத்திருந்த வியாபாரிகள் நல்ல விலை கொடுத்து வாங்கிச் சென்றனர்.

பல நாள்களுக்குப் பிறகு, கடலுக்குச் சென்ற முதல் நாளிலேயே மீன்களுக்கு நல்ல விலை கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மீன்பிடிக் காலம் தொடங்கியதையடுத்து ராமேசுவரம் துறைமுகப் பகுதி, பவளம் கடற்கரை, தெற்கு மாரியம்மன் ஆகிய கடற்கரைப் பகுதியில் மீனவர்கள், வியாபாரிகள் திருவிழா கூட்டம் போல் திரண்டனர்.

## கோயம்பேட்டில் மாம்பழங்களின் விலை கடும் சரிவு

**சென்னை,**

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு மாம்பழ வரத்து முன்பை விட அதிகரித்துள்ளதால் விலை சரிந்துள்ளது. இன்னும் 20 நாள்களுக்கு விலை சரிவு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியாவிலேயே மிகப்பெரிய சந்தையான சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் மாம்பழங்களின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. குறிப்பாக பங்கனப்பள்ளி வகை மாம்பழத்தின் விலை கடும் சரிவடைந்துள்ளது.

இது குறித்து கோயம்பேடு பழ வியாபாரிகள் சங்கத் தலைவர் மணிவண்ணன் கூறியது:

ஆந்திரத்திலுள்ள நெல்லூர், விஜயவாடா, குண்டூர், உளவுப்பாடு, காவளி தமிழகத்திலுள்ள ஊத்துக்கோட்டை மற்றும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து நாள்தோறும் லாரிகள் மூலம் 120 டன் பங்கனப்பள்ளி மாம்பழங்கள் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வந்துகொண்டிருந்தன. தற்போது இந்தப் பகுதிகளில் விளைச்சல் அதிகரித்துள்ளதால் 250 டன் மாம்பழங்கள் மார்க்கெட்டுக்கு வருகின்றன. இதன் காரணமாக பங்கனப்பள்ளி மாம்பழங்களின் விலை குறைந்துள்ளது. தற்போது இந்த மாம்பழங்களின் சீசன் உச்ச அளவில் உள்ளதால் அதிகளவிலான மாம்பழங்கள் மார்க்கெட்டுக்கு வருகிறது. இந்த விலை குறைவானது அடுத்து வரும் 20 நாள்களுக்கு நீடிக்கும். அதன் பிறகு பங்கனப்பள்ளி மாம்பழங்களின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதேபோல் மல்கோவா, அல்போன்சா, செந்தூரம், ஒட்டு வகை மாம்பழங்களின் வரத்தும் அதிகரித்துள்ளதால், இவற்றின் விலையும் குறைந்துள்ளது. மாம்பழ வகைகளின் விலை குறைவு காரணமாக பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் அதிகளவிலான மாம்பழங்களை வாங்கிச் செல்கின்றனர் என்றார்.

மாம்பழங்களின் விலை நிலவரம் - ஒரு கிலோ (அடைப்புக்குறிக்குள் பழைய விலை):

பங்கனப்பள்ளி - 30 (60)

மல்கோவா - 35 (50)

அல்போன்சா - 50 (90)

செந்தூரம் - 20 (30)

இமாம்பசந்த் - 70 (60)

ருமானியா - 15 (15)

ஒட்டு - 13 (20)

## வெயிலினால் காய்கறி விலை உயர்வு: இஞ்சி, முருங்கை விலை குறைவு



**சென்னை,**

கடும் வெயிலின் காரணமாக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை சற்று அதிகரித்துள்ளது. இது குறித்து கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் சங்க ஆலோசனை குழு உறுப்பினர் எஸ்.செ்ந்தர்ராஜன் கூறியது:

கத்திரி வெயில் முடிந்த பிறகும் தமிழகத்தில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகிறது. இதன் காரணமாக தமிழகம் முழுவதும் காய்கறிகளின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே மிகப்பெரிய சந்தையான சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நாள்தோறும் வரும் காய்கறிகளின் வரத்தும் குறைந்துள்ளது. தேவை அதிகமாக இருப்பதால் காய்கறிகளின் விலை தற்போது அதிகரித்துள்ளது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 1) காய்கறிகளின் சில்லறை விலை நிலவரம் கிலோவில் (அடைப்புக்குறிக்குள் ஒரு வாரத்துக்கு முந்தைய விலை):

கத்திரிக்காய் 15 (10)

வெண்டைக்காய் 15 (10)

கோவைக்காய் 15 (15)

கொத்தவரங்காய் 18 (15)

வெங்காயம் (பெரியது) 20 (15)

சின்ன வெங்காயம் 30 (25)

தக்காளி 13 (15)

பாவைக்காய் 20 (20)

காலிஃப்ளவர் 25 (15)

முள்ளங்கி 25 (10)

உருளைக்கிழங்கு 25 (18)

இஞ்சி 90 (110)

முருங்கை 30 (80)

பீன்ஸ் 50 (40)

கேரட் 25 (20)

பீட்ரூட் 20 (15)

முட்டைக்கோஸ் 10 (7)

சேப்பங்கிழங்கு 35 (25)

சேனைக்கிழங்கு 15 (15)

சுரைக்காய் 20 (10)

பச்சை மிளகாய் 20 (20)

## ரூ.3669.98 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயம்:ஆட்சியர்

**விருதுநகர்,**

விருதுநகர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 3669.98 கோடிக்கு கடன் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாகவும், இதில் தொழிற்சாலைகளுக்கு 1488.88 கோடியும், அதற்கு அடுத்த படியாக விவசாயத்துக்கு 1359 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் வங்கியாளர்கள் ஆய்வுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தலைமை வகித்து பேசுகையில், இம்மாவட்டத்தில் வங்கிகளால் நிகழாண்டில் ரூ.3669.98 கோடி கடன் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முன்னோடி வங்கியால் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 22.20 சதவீதம் அதிகம் ஆகும். இதில், முன்னுரிமைக் கடனுக்கு ரூ.821 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் சிறு தொழில் மற்றும் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு 12.94 சதவீதம் அதிகமாக ரூ.1488 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்டத்தில் போதிய மழையில்லாத காரணத்தால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. இதுபோன்ற காரணங்களால் அதற்கு அடுத்த படியாக விவசாயத்துக்கு 29.05 சதவீதம் அதிகமாக ரூ.1359 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்தாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்கை விட அதிகமாகவே கடன் வழங்கப்பட்டுள்ளது. கடன் திட்ட அறிக்கை வெளியிட்டது முதல் பொதுமக்களிடம் இருந்து வரும் விண்ணப்பங்களை பரிசீலித்து எளிதாக கடன்

வழங்கும் வகையில் வங்கியாளர்களின் நடவடிக்கை இருக்க வேண்டும் என ஆட்சியர் டி.என். ஹரிஹரன் கேட்டுக் கொண்டார்.

அதையடுத்து, முன்னோடி வங்கியால் தயாரிக்கப்பட்ட கடன் திட்ட செயலாக்க அறிக்கையை ஆட்சியர் டி.என். ஹரிஹரன் வெளியிட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் திருஞானசம்பந்தம் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மகளிர் திட்ட அலுவலர் பிச்சை, நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் ஜே. சுப்பிரமணியன், முன்னோடி வங்கி மேலாளர் சுலைமான், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் நவாஸ்கான் உள்ளிட்ட பல்வேறு வங்கிகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை வீழ்ச்சி

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

சனிக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 73 ஆக இருந்தது.

கோழி இறைச்சி விற்பனைக் குறைவால் ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 70 ஆக விலையை குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## செய்யாறில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**செய்யாறு,**

செய்யாறு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

கூட்டத்துக்கு கோட்டாட்சியர் எஸ்.சாந்தா தலைமை தாங்குகிறார்.

இத்தகவலை வட்டாட்சியர் ஜெ.சேகர் தெரிவித்துள்ளார்.

## திருச்செங்கோட்டில் ரூ.89 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை ரூ. 89 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்தி வேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் விற்பனைச் சங்கத்துக்கு சனிக்கிழமை 2,020 மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். இவற்றை வாங்குவதற்காக ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் பகுதிகளிலிருந்து 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்தனர். இதில் ஒரு குவிண்டால் விரலி மஞ்சல் ரூ. 5,669 முதல் 7,200 வரையும், கிழங்கு ரகம் ரூ. 4,602 முதல் ரூ. 6,655 வரையும், பனங்காளி ரகம் ரூ. 9,500 முதல் 12,699 வரையும் விற்பனையானது. மொத்தம் ரூ. 89 லட்சம் மஞ்சள் விற்பனையானது. ஈரோடு மஞ்சள் சந்தையைவிட 500 மூட்டை அதிக வரத்து வந்ததுடன், குவிண்டாலுக்கு ரூ. 200 முதல் 500 வரை அதிகம் விற்பனையானதாக கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

## கன்னிப்பூ சாகுபடிக்காக பேச்சிப்பாறை அணை திறப்பு

**குலசேகரம்,**

குமரி மாவட்டத்தில் பாசனத்துக்காக பேச்சிப்பாறை அணை ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது. விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னிப்பூ, கும்பப்பூ என இரு பருவ நெல் சாகுபடி நடைபெறுகிறது. இதுதவிர வாழை உள்ளிட்ட பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. தற்போது கன்னிப்பூ பருவத்துக்காக ஆயத்தப் பணிகளை விவசாயிகள் செய்துள்ள நிலையில், கோதையாறு பாசனத் திட்டத்தின் கீழ் பேச்சிப்பாறை அணை திறக்கப்பட்டது. காலை 11.15 மணிக்கு அணையிலிருந்து தண்ணீரை ஆட்சியர் எஸ்.நாகராஜன் திறந்துவிட்டார். தொடர்ந்து ஆட்சியர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: குமரி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க குமரி மாவட்ட அணைகளைத் திறக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் ஆணை பிறப்பித்ததையடுத்து பேச்சிப்பாறை அணை திறக்கப்பட்டுள்ளது. இந்த

அணையில் 1390 மி.க. அடி தண்ணீர் இருப்பு உள்ளது. இது கடந்த ஆண்டைவிட 500 மி.க. அடி அதிகமாகும். அணையிலிருந்து விநாடிக்கு 200 கன அடி தண்ணீர் பாசனத்துக்காகத் திறந்துவிடப்படுகிறது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகள் மூலம் தோவாளை, நாஞ்சில் நாடு, பத்மநாபபுரம் புத்தனாறு உள்ளிட்ட கால்வாய்கள் வழியாக 79 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்களில் பாசனம் செய்யப்படுகிறது என்றார். நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் கே.டி. பச்சைமால், நாஞ்சில் முருகேசன், அதிமுக கன்னியாகுமரி மாவட்டப் பொறுப்பாளர் தமிழ்மகன் உசேன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அண்ணா, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன், உதவிச் செயற்பொறியாளர்கள் முருகன், அனிதா சாந்தி, ஈனோக், பேச்சிப்பாறை அணை உதவிப் பொறியாளர் மெல்கி சதேக், திற்பரப்பு உதவிப் பொறியாளர் சுபாஷ், சிற்றாறு பட்டணங்கால் உதவிப் பொறியாளர் மைக்கேல் ராஜ் மற்றும் உதவிப் பொறியாளர்கள் கதிரவன், அப்பாதுரை, வல்சன் போஸ், மாவட்ட பாசனத்தார் சபை தலைவர் வின்ஸ் ஆன்டோ, விவசாய அமைப்பு நிர்வாகிகள் ஹென்றி, அந்தோணி, பத்மதாஸ், குணசீலன், முருகேசபிள்ளை, தங்கப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அணைகளில் தண்ணீர் இருப்பு: பேச்சிப்பாறை அணையில் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி நீர்மட்டம் 21.60 அடியாகவும், அணைக்கு உள்வரத்து விநாடிக்கு 191 கன அடியாகவும், வெளியேற்றம் விநாடிக்கு 200 கன அடியாகவும், அணையின் நீர் இருப்பு 1390 மி.க. அடியாகவும் இருந்தது. பெருஞ்சாணி அணையில் நீர்மட்டம் 46 அடியாகவும், உள்வரத்து விநாடிக்கு 46 கன அடியாகவும், வெளியேற்றம் இல்லாமலும், அணையின் நீர் இருப்பு 717 மி.க. அடியாகவும் இருந்தது. சிற்றாறு 1 அணையில் நீர்மட்டம் 7.94 அடியாகவும், உள்வரத்து மற்றும் வெளியேற்றம் இல்லாமலும், அணையின் நீர் இருப்பு 138.34 மி.க. அடியாகவும் இருந்தது. சிற்றாறு 2 அணையில் நீர்மட்டம் 8.03 அடியாகவும், உள்வரத்து மற்றும் வெளியேற்றம் இல்லாமலும், அணையின் நீர் இருப்பு 324.60 மி.க. அடியாகவும் இருந்தது. மொத்தமாக அணைகளில் 2564.94 மி.க. அடி தண்ணீர் இருப்பு உள்ளது. இது கடந்த ஆண்டைவிட அதிமாகும். கால்வாய் சீரமைப்புப் பணிகள்: தற்போது அணையிலிருந்து தண்ணீர் திறப்பட்டுள்ள அதே வேளையில் கால்வாய்கள் தூர் அகற்றுதல் மற்றும் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் அணையிலிருந்து விடப்படும் தண்ணீரின் அளவு தேவைக்கேற்ப மாறுபடும் என்று பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விற்பனையாளர் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் : விதைஆய்வு துணை இயக்குனர் விளக்கம்

**சேலம்**: "ஒரே வேளையில் பூத்து, முதிர்ந்து, அறுவடை செய்ய ஏதுவான, கலப்படமில்லாத, அதிக மகசூல் தரக்கூடிய தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும்' என, விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தர்ராஜன் விளக்கி உள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவது தான், விதை விற்பனையின் நோக்கம். விதை விற்பனை நிலையங்களுக்கு வரும் விவசாயிகளுக்கு முழுமையான விவரங்களை முறையாக தெரிவிக்க வேண்டும். விதை விற்பனை நிலையங்களில், விதை விற்பனை உரிமத்தை விவசாயிகளின் பார்வைக்கு தெரியும்படி வைக்க வேண்டும். தகவல் பலகையை வைத்து அதில் என்னென்ன விதைகள் விற்பனைக்காக உள்ளது. அவற்றின் பெயர், ரகம், குவியல் எண், இருப்பு அளவு, விலை ஆகிய விவரங்களை நாளது தேதி வரை எழுதி வைக்க வேண்டும். விவசாயிகளுக்கு, விற்பனை பட்டியல் வழங்க வேண்டும். அதில் விதைகள் வாங்கும் விவசாயிகளின் பெயர், தந்தை பெயர், முகவரி, விதையின் பெயர், பயிர், ரகம், நிலை, வாங்கிய அளவு, குவியல் எண், காலாவதி தேதி ஆகிய விவரங்கள் அவசியம் குறிப்பிட வேண்டும். மேலும், அப்பட்டியலில், வாங்குபவரின் கையொப்பம் இருப்பது அவசியம். இருப்பில் உள்ள விதைக் குவியல்களை ரகம், குவியல் வாரியாக அடுக்கி வைக்க வேண்டும். விதைகளை உரம், பூச்சி மருந்து இல்லாத இடங்களில் தனியாக இருப்பு வைக்க வேண்டும். பதிவேட்டில், விதைக் குவியல்களை இருப்பு வைக்கும்போது, விதைகள் எங்கிருந்து வாங்கப்பட்டது என்ற விவரத்தையும், பயிர், ரகம், நிலை, கொள்கலன் வாரியாக இருப்பு வைத்து பராமரிக்க வேண்டும். விதைக் குவியல்களுக்கு தரப்பரிசோதனை அறிக்கை வைத்திருக்க வேண்டும். விவரங்கள் குறைபாடு உள்ள

விவர அட்டை (லேபிள்) அடங்கிய விதைப்பைகளை விற்பனைக்கு வைக்கக்கூடாது. காலாவதியான விதைக் குவியல்களை விற்பனக்கு வைக்கக்கூடாது. இருப்பில் உள்ள விதைகள் காலாவதியாகிவிட்டால், தனிப்பதிவேட்டில் பதிவு செய்து விற்பனைக்கு அல்லாதது என்று தனியாக வைக்க வேண்டும். நல்ல முளைப்புத்திறனுடன் தேவையான பயிர் எண்ணிக்கை தந்து, சீரான வளர்ச்சியுடன் ஒரே வேளையில் பூத்து, முதிர்ந்து, ஒரே சமயத்தில் அறுவடை செய்ய ஏதுவான, கலப்படமில்லாத, அதிக மகசூல் தரக்கூடிய தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்து வேளாண் உற்பத்திக்கு உறுதுணையாக விதை விற்பனையாளர் செயல்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மல்லிகை விலை வீழ்ச்சி கிலோ ரூ.50க்கு விற்பனை

**சின்னமனூர்** : மழையால் மல்லிகைப் பூ விளைச்சல் அதிகரித்து, மார்க்கெட்டிற்கு வரத்தும் அதிகரித்துள்ளதால், விலை மலிந்து, கிலோ ரூ.50 க்கு விற்பனையாகிறது. தேனி மாவட்டத்தில் சீலையம்பட்டி, பல்லவராயன்பட்டி, கோட்டூர், கம்பம், ஆண்டிபட்டி, வீரபாண்டி உள்ளிட்ட பகுதிகளில் மல்லிகை அதிகம் சாகுபடியாகிறது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் மட்டும் பனியின் தாக்கத்தால், விளைச்சல் குறையும். அப்போது, விலையும் அதிகமாக இருக்கும். சுபமுகூர்த்தம் காரணமாக, தை, மாசியிலும் விலை அதிகமாகவே இருக்கும்.

அந்த மாதங்களில் 1 கிலோ ரூ.1500 வரை, விற்பனையானது. ஆண்டுதோறும், வைகாசியில் மல்லிகை விளைச்சல் அதிகம் இருக்கும்.

இந்நிலையில், கடந்த 2 வாரமாக, பெய்து வரும் மழையால், மார்க்கெட்டிற்கு மல்லிகை வரத்து பல மடங்கு உயர்ந்துள்ளது. இதனால், தற்போது கிலோ ரூ.50 ஆக குறைந்துள்ளது.

**தடை நீங்கியும் தமிழகத்தில் மீன் விலை குறையவில்லை**

**சென்னை** : தடை காலம் முடிந்து, தமிழகத்தில், மீன்பிடி தொழில் சூடுபிடித்தாலும், மீன் விலை இன்னும் குறையவில்லை. விசைப்படகுகள் கரை திரும்ப நான்கு நாட்களாகும் என்பதால், அசைவ பிரியர்கள், அதுவரை காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட, கிழக்கு கடலோரப் பகுதிகளில் (வங்கக்கடல்), மீன்களின் இன விருத்திக்காக, 45 நாட்கள், மீன்பிடி தடை விதிக்கப்பட்டிருந்தது. மக்கள் முகாம் இந்தத் தடை, மே, 29ம் தேதியுடன் முடிந்தது. தொடர்ந்து, 45 நாட்களாக ஓய்வெடுத்த விசைப்படகுகள், 30ம் தேதி அதிகாலையில் இருந்து மீன் பிடிக்க கடலுக்குள் சென்றன. தமிழகம் முழுவதும் உள்ள, 15 ஆயிரம் விசைப்படகுகளில், 60 சதவீதம் படகுகள் கடலுக்குள் சென்றுள்ளன. இதனால், சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகம் உட்பட, தமிழகம் முழுவதும் உள்ள துறைமுகங்களும் களைகட்டியுள்ளன. கடலுக்குள் சென்ற சில படகுகள், ஓரிரு நாட்கள் மீன்களை பிடித்துவிட்டு, நேற்று காலை, கரைக்கு வந்தன. குறைந்த விலையில் மீன்கள் கிடைக்கும் என, அசைவ பிரியர்கள், மீன்பிடி துறைமுகங்களில் முகாமிட்டனர். சென்னை, காசிமேடு மீன்பிடி துறைமுகம், மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஓரளவிற்கு மீன்கள் வந்தன; ஆனால், விலையில் மாற்றம் இல்லை. விலை நிலவரம் வஞ்சிரம் முதல் ரகம் - 900 ரூபாய்; இரண்டாம் ரகம் - 500; இறால் முதல் ரகம் - 1,110; இரண்டாம் ரகம் - 450; நண்டு, 200 முதல் 250 ரூபாய்; சீலா - 300; பாறை - 220 ரூபாய் என்ற அளவில் விற்பனையாகின. துக்கடா மீன்கள் கூட, கிலோ, 100 ரூபாய்க்கு மேல் தான் விற்றன. விலை குறையாததால், அசைவ பிரியர்கள் ஏமாற்றத்துடன் சென்றனர். விசைப்படகு மீனவர்கள் கூறியதாவது: மீன்பிடி தடை, மே, 29 நள்ளிரவு தான் முடிந்தது. 30ம் தேதி அதிகாலை தான் விசைப்படகுகள் கடலுக்குள் சென்றன. ஓரிரு நாளில் திரும்பும் படகுகள் தான் கரைக்கு வந்துள்ளன. மீன் வரத்தும் குறைவாகவே உள்ளது. வழக்கமாக, விசைப்படகுகள், ஒரு வாரம் முதல், 10 நாட்கள் கழித்து தான் கரை திரும்பும். 30ம் தேதி சென்ற விசைப்படகுகள், 5, 6ம்

தேதிகளில் தான் கரை திரும்பும். எல்லாரும் எதிர்பார்க்கும் அளவில், மீன் வரத்து அதிகமாக இருக்கும் என்பதால், மீன் விலையும் வெகுவாகக் குறையும். அதுவரை, அசைவ பிரியர்கள் காத்திருக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

## உயரமான இடத்தில் நெல் மூட்டை குத்தி நெல் எடுக்க புதிய குத்தூசி




**செங்குன்றம்** : லாரியில் உயரமான இடத்தில் உள்ள மூட்டைகளில் இருந்து நெல் சேகரிக்க, தற்போது குழாய் போன்ற குத்தூசிகள் பயன்படுத்தப்படுகின்றன. செங்குன்றம் நெல் சந்தைக்கு, தமிழகம், ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இருந்து, நெல் இறக்குமதி செய்யப்படுகிறது. நெல் மண்டிகள் மூலம் அவை விற்பனை செய்யப்படுவது வழக்கம். வியாபாரிகளுக்கு நெல்லின் தரம் அறிந்து சொல்வதற்கு, இடைத்தரகர்கள் உள்ளனர். அவர்கள் 'சர்க்கரை குத்தி' எனும் அரை அடி நீளமுள்ள சிறிய அலுமினிய குத்தூசி மூலம், மூட்டையில் குத்தி, நெல்லை வெளியில் எடுப்பர். தற்போது, பெரிய லாரிகளில் நெல் மூட்டைகள் கொண்டு வரப்படுகின்றன. மிக உயரத்தில் நெல் மூட்டைகள் அடுக்கி வரப்படுவதால், கீழே நின்றபடி, சிறிய குத்தூசி மூலம், மூட்டையை குத்தி, நெல்லை எடுக்க முடிவதில்லை. அதனால், இப்போது நெல் மண்டிகளில், பெரிய அளவிலான

பிரத்யேக குத்துாசிகள் தயாரித்து பயன்படுத்துகின்றனர். இரண்டரை அடி நீளம், ஒன்றரை அங்குலம் சுற்றளவு கொண்ட உறுதியான இரும்பு குழாய்களை குத்துாசி போல் வடிவமைத்து, நெல் எடுக்கின்றனர்.இதன் மூலம் உயரம் குறைந்தவர்களும் கீழே நின்றபடி, உயரத்தில் இருக்கும் மூட்டையில் குத்தினால் நெல் குத்துாசியின் அடிப்பகுதி வழியாக பாத்திரத்திற்கு வந்து விடும்.

## மணிமுத்தாறு அணைத் திறப்பு பாபநாசம் அணை திறக்கப்படுமா

**திருநெல்வேலி**: கார் பருவ நெல் சாகுபடிக்காக மணிமுத்தாறு அணை நேற்று திறக்கப்பட்டது. திருநெல்வேலி, மணிமுத்தாறு அணையில் இருந்து கார் நெல் சாகுபடிக்காக நேற்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது. 118 அடி உயரம் கொண்ட அணையில் தற்போது 67 அடி உள்ளது. எனவே பெருங்கால் மதகு பாசனம் மூலம் சிங்கம்பட்டி, தெற்கு கல்லிடைகுறிச்சி, வைராவிகுளம், தெற்குபாப்பான்குளம், பொட்டல் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள 2 ஆயிரத்து 700 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. வினாடிக்கு 40 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நெல் உற்பத்தி முடியும் வரையிலும் தண்ணீர் விநியோகிக்கப்படும். நிகழ்ச்சியில் கலெக்டர் கருணாகரன், அமைச்சர் செந்தூர் பாண்டியன் மற்றும் எம்.பி.,க்கள் முத்துக்கருப்பன், விஜிலாசத்யானந்த், பிரபாகரன், வசந்திமுருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பாபநாசம் அணை திறக்கப்படுமா..

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் கார் சாகுபடி நெல் உற்பத்திக்காக, பாபநாசம் அணை ஆண்டுதோறும் ஜூன் முதல்தேதியன்று திறந்துவிடுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு நேற்று திறக்கப்படவில்லை. எனவே பாபநாசம் அணை திறக்கப்படுமா விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## ஆத்துாரில் மஞ்சள் ஏலம் ஒத்திவைப்பு

**ஆத்துார்**: ஆத்துார், வேளாண் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு, மஞ்சள் மூட்டை வரத்து இல்லாததால், ஏலம் ஒத்தி

வைக்கப்பட்டது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வார நாட்களில் மஞ்சள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துகளின் ஏலம் நடந்து வருகிறது.

இங்கு நடக்கும் ஏலத்துக்கு, வெளிமாவட்டம் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சள், பருத்தியை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, மஞ்சள் மூட்டையை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வராததால், கூட்டுறவு சங்க அலுவலர்கள், மஞ்சள் ஏலத்தை ஒத்திவைத்தனர்.

## 'விதை முளைப்புத்திறன் சோதனை அவசியம்'

**திருவள்ளூர்** : தரமான விதையா என்பதை அறிய, முளைப்புத் திறன் சோதனை செய்து பயிரிடுவது அவசியம், என, வேளாண் அலுவலர் தெரிவித்து உள்ளார். திருவள்ளூர் விதை பரிசோதனை ஆய்வக, வேளாண் அலுவலர் ஞானசேகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தென்மேற்கு பருவமழை துவங்க உள்ள நிலையில், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், தங்களிடம் உள்ள, நெல், சிறுதானிய விதைகள் நல்ல முளைப்புத் திறன் கொண்டதா என்பதை அறிந்து, பயிர் செய்ய வேண்டும்.விதைப்பதற்கு முன், முளைப்பு திறன் அறிந்து விதைத்தால், குறைந்த விதையில், அதிக மகசூல் பெறலாம்.விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், தங்களிடம் உள்ள விதையின் முளைப்புத் திறன் சோதனை அறிய, நெல் 400 கிராம், கம்பு 150 கிராம், சோளம் 900 கிராம், ராகி 60 கிராம், மக்காச்சோளம் ஒரு கிலோ, என்ற அளவில், திருவள்ளூர், பெரியகுப்பம், ஆயில்மில் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள, விதை பரிசோதனை அலுவலகத்தை நாடலாம்.

விதை பரிசோதனை கட்டணம், 30 ரூபாய்.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## ஏரி பாசன சங்கங்களுக்கு சிறப்பு பயிற்சி முகாம்

**திண்டிவனம்**: திண்டிவனம் அடுத்த ஆலங்குப்பம், நல்முக்கல், சாரம், பாஞ்சாலம், நொளம்பூர், கீழ்கூடலூர், பழமுக்கல், டி.நல்லாளம் ஆகிய பகுதிகளில் தமிழக அரசின் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் பொதுப்பணி துறையினரால் ஏரி நீரை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது. நீரின் முக்கியத்துவம், நீர் சிக்கனம், சுழற்சி முறை பாசனம், சங்க பயிற்சிகள் குறித்து சிறப்பு பயிற்சியாளர் அருண்குமார், மணிகண்டன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

## கருணைகிழங்கு சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம்

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதியில் கருணை கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சங்கராபுரம்பகுதியில் அரசம்பட்டு, பூட்டை, பொய்குனம், ஆலத்தூர், லக்கினாய்கன்பட்டி ஆகிய கிராமங்களில் அதிகளவு கருணை கிழங்கை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். பல நோய்களுக்கு பயன் படும் மருத்துவ குணம் கொண்ட கருணை கிழங்கை வாங்குபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சங்கராபுரம் பகுதியில் அறுவடை செய்யும் கருணை கிழங்குகள் சென்னை கோயம்பேடு மார்க்கெட், திருவண்ணாமலை, சேலம், திருச்சியை சேர்ந்த வியாபாரிகள் அறுவடை செய்யப்படும் இடத்திற்கே வந்து மொத்தமாக வாங்கி செல்கின்றனர். கருணை கிழங்கு கடந்த ஆண்டு கிலோ 10 ரூபாய்க்கு விற்பனை ஆனது. இந்த ஆண்டு சங்கராபுரம் பகுதியில் குறைந்த பரப்பளவில் கருணை கிழங்கை சாகுபடி செய்துள்ளதால் கடந்த ஆண்டை விட அதிக விலை கிடைக்கும் என்று விவசாயிகள் நம்பி உள்ளனர்.

## கால்நடை வளர்ப்பு குறித்து கண்டுணர்தல் பயணம்

**உளுந்தூர்பேட்டை**: திருக்கோவிலூர் உட்கோட்டம் களமருதூர் கால்நடை உதவி மருத்துவத்திற்குட்பட்ட தமிழக அரசின் நீர் வள நில வள திட்டத்தின் கீழ் கெடிலம் உபவடி நிலப்பகுதியின் கண்டுணர்தல் பயணம் நடந்தது. கள மருதூர் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் சுரேஷ்குமார் தலைமையில் 50 விவசாயிகளின்

பயணத்தை கால்நடைத்துறை உதவி இயக்குநர் குபேந்திரன் வழியனுப்பி வைத்தார். டாக்டர்கள் தமிழரசு, பாலசுப்ரமணியன் உடனிருந்தனர். தலைவாசல் பகுதியில் ஆடு, மாட்டு பண்ணைகளையும், கோழி பண்ணைகள், வாழப்பாடி பகுதியில் மாட்டு பண்ணைகள், செறிவூட்டப்பட்ட கால்நடை சிறுநீரை நிலத்திற்கு பயன்படுத்தும் முறைகளை நேரடியாக பார்வையிட்டு சந்தேகங்களை கேட்டறிந்தனர். மாட்டு பண்ணைகளில் பால் கறக்கும் முறைகள், தீவண புல் வளர்க்கும் முறைகள், தீவண புல் வளர்ப்பதற்கு பயன்படும் தெளிப்பு நீர் பாசன கருவிகள், தீவண புல் நறுக்கும் கருவிகள் பயன்படும் முறைகளை நேரில் பார்வையிட்டனர்.

## சூளகிரியில் கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி

**ஓசூர்**: கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் நேற்று முன்தினம் மூன்று மணி நேரம் பெய்த கன மழையலால், நேற்று முழுவதும் சூளகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகள் குளிர்ந்து காணப்பட்டதால், மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் கடந்த இரு மாதங்களாக கோடை வெயில் சுட்டெரித்ததால், மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். சில நாட்களுக்குமுன், மாவட்டம் முழுவதும் பரவலாக கனமழை பெய்ததால், சூளகிரியில் சற்று கோடை வெயிலின் தாக்கம் குறைந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சூளகிரியில் கனமழை கொட்டி தீர்த்தது. சூளகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான காமன்தொட்டி, மருதாண்டபள்ளி, மாரண்டபள்ளி, அத்திமுகம், காளிங்காவரம், தியாகரசனப்பள்ளி, மேலுமலை, உத்தனப்பள்ளி ஆகிய பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு, 8 மணி முதல், 11 மணி வரை கன மழை பெய்தது. நேற்று முழுவதும் சூளகிரியில் குளிர்ந்த காற்று வீசியதால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## தக்காளி விலை கடும் வீழ்ச்சி

**பொங்கலூர்** : கிணறு மற்றும் போர்வெல் பாசனத்தை நம்பி, விவசாயிகள், கடந்த மாசி பட்டத்தில் தக்காளி சாகுபடி செய்திருந்தனர். கடந்த மே மாதத் துவக்கத்தில்

இருந்து பெய்த தொடர் மழையால், தக்காளி பழங்கள் பெரும்பாலும் அழுகி விட்டன. மழைக்கு முன், 15 கிலோ கொண்ட ஒரு டிப்பர் தக்காளி 150 ரூபாய்க்கு விற்பனையானது. மழை பெய்து பழங்கள், பெரும் பகுதி சேதமடைந்ததால், விலை உயரும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருந்தனர். எதிர்பார்ப்புக்கு மாறாக விலை இறங்குமுகமாக உள்ளது. ஒரு டிப்பர் தக்காளி 80 முதல் 90 ரூபாய் வரை விலை போகிறது. வியாபாரிகள் கூறு கையில், "மழையால் பழங்கள் தரமிழந்து விட்டதாலும், வெளியூர் வரத்து அதிகரித்துள்ளதாலும் விலை குறைந்துள்ளது,' என்றனர்.

## தென்மேற்கு பருவ மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்

**கரூர்**: கோடைக்காலம் முடிந்த நிலையிலும், கரூர் மாவட்டத்தில் வெயில் சுட்டெரித்து வருகிறது. கடந்த சில நாட்களாக, பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வரும் நிலையில், கரூர் மாவட்டத்தில் மழை பெய்யாததால், விவசாயிகள் பெரும் சோகத்தில் உள்ளனர். கரூர் மாவட்டத்தில், ஆண்டுக்கு, 652.20 மி.மீ., பெய்ய வேண்டும். கடந்தாண்டு, வடகிழக்கு பருவமழை மற்றும் தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. மே மாத இறுதி, அல்லது ஜூன் மாதம் தொடக்கத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும். ஆனால், மே மாதம், பலமான காற்று மட்டுமே வீசியது. மழை பெய்யவில்லை. ஏற்கனவே, மேட்டூர் அணையில் குறைந்தளவே நீர் இருப்பதால், குடிநீருக்காக மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டு ள்ளது. இதனால், கரூர் மாவட்ட காவிரியாற்றில், பெரும்பலான பகுதிகள் பாலைவனம் போல் காட்சியளிக்கிறது. அமராவதி ஆற்றின் நிலையும் அது தான். போதிய மழை இல்லாததால், ஆடிப்பட்டத்தில் மானாவாரி பயிர்களின் சாகுபடியும் கேள்விக்குறியாகி விட்டது. கடந்த வாரம், சில நாட்கள் மட்டும் மழை பெய்தது. தொடர்ந்து, கரூர் மாவட்டம் முழுவதும் பலத்த சூறாவளி காற்று வீசி வருகிறது. தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வரும் நிலையில், கரூர் மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவு மழை இல்லை. மேலும், தொடர்ந்து வீசி வரும் சூறாவளி காற்றால், ஜூன் மாதத்தில் பெய்ய வேண்டிய தென் மேற்கு பருவமழையின் அளவு குறையும், அபாயம் உள்ளது. இதனால், "கரூர் மாவட்ட விவசாயிகள், காற்றின் வேகம் குறைந்து தென் மேற்கு பருவக்காலத்தில், அதிக

மழை பெய்ய வேண்டும்' என வருண பகவானின் கருணையை எதிர்பார்க்கின்றனர்.

## முகூர்த்தத்தால் விலை உயர்ந்த முருங்கை

**ஒட்டன்சத்திரம்** : சுப மூகூர்த்தம் காரணமாக,ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கைக்காய் விலை உயர்ந்துள்ளது. அக்னி நட்சத்திரம் முடிந்து திருமணம், புதுமனைபுகு விழா உள்ளிட்ட சுபமுகூர்த்த விழாக்கள் நடந்து வருகின்றன. இவற்றில் பரிமாறப்படும் உணவு வகைகளில் முருங்கைக்காய் சாம்பார் முக்கிய இடம் வகிக்கிறது. ஒட்டன்சத்திரம், மூலனூர், மார்க்கம்பட்டி பகுதிகளில் முருங்கை அதிகமாக பயிரிடப்படுகிறது. மரம் முருங்கையை விட செடி முருங்கை வரத்து அதிகமாக உள்ளது. கடந்த வாரம் செடி முருங்கை கிலோ ரூ.14க்கு விற்றது. முகூர்த்த நாளை முன்னிட்டு இதன் தேவை அதிகரித்தது. இதனால் வியாபாரிகள் அதிகமாக வாங்க தொடங்கினர். இதனால் நேற்று கிலோ ரூ.20க்கு விற்றது.

## ஒட்டன்சத்திரத்தில் தக்காளி விலை சரிவு

**ஒட்டன்சத்திரம்** : ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி விலை கிலோவிற்கு ரூ.5 குறைந்துள்ளது. ஒட்டன்சத்திரத்தை சுற்றி உள்ள கிராமப்பகுகளில் தக்காளி அதிகமாக பயிரிடப்படுகிறது. நாட்டு தக்காளி ரகங்களை விட ஒட்டு தக்காளி அதிகமாக விளைவிக்கப்படுகிறது. விளைச்சல் உள்ள காலங்களில் ஒரு கடைக்கு ஆயிரம் பெட்டிவரை தக்காளி வரத்து இருக்கும். அப்போது ஒரு கிலோ தக்காளி ஒரு ரூபாய்க்கும் கீழே விற்கும். மழையின்மையால் தக்காளி சாகுபடி பரப்பு மிகவும் குறைந்து விட்டது. தற்போது ஒரு கடைக்கு 100 பெட்டிகள்தான் வருகிறது. உள்ளூர் வரத்து குறைந்துள்ள போதிலும், உடுமலை, பொள்ளாச்சி பகுதிகளில் விளைந்த தக்காளி ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. இதனால் தக்காளி விலை குறைந்துள்ளது.கடந்த வாரம் கிலோ ரூ.14க்கு விற்ற தக்காளி, நேற்று ரூ.5 குறைந்து ரூ.9க்கு விற்றது. சுப முகூர்த்த சீசன் துவங்கி உள்ளதால், தக்காளி விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>தேனி மாவட்டத்தில் முதல் போக சாகுபடி பெரியாறு அணையிலிருந்து பாசனத்துக்கு நீர் திறப்பு</u>**



**கூடலூர்:** முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி தேக்கடியில் நேற்று நடந்தது. தேனி மாவட்டத்தில், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் உத்தமபாளையம் வட்டத்தில் 11,807 ஏக்கர், போடி வட்டத்தில் 488 ஏக்கர், தேனி வட்டத்தில் 2,412 ஏக்கர் என மொத்தம் 14,707 ஏக்கர் நிலப்பரப்பு பெரியாற்று பாசனத்தின் மூலம் இருபோக நெல் சாகுபடி நடந்து வருகிறது. முதல் போக சாகுபடிக்காக ஆண்டு தோறும் ஜூன் முதல் வாரம் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் திறப்பது வழக்கம்.

கடந்த சில ஆண்டுகளாக அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், முதல்போக விவசாயத்துக்கு தண்ணீர் திறப்பதில் தாமதம் ஏற்பட்டது. மேலும் பருவமழை பொய்த்ததால் இரண்டாம் போகம் முழுமையாக நடக்கவில்லை. தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகின. குடிநீருக்காக மட்டுமே அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், பெரியாறு அணையிலிருந்து முதல்போக

விவசாயத் துக்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி இப்பகுதி விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ஜூன் 1 முதல் விவசாயத்திற்கு தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.இதைத்தொடர்ந்து நேற்று நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அரசு அதிகாரிகள் மற்றும் விவசாய சங்கத்தினர் தேக்கடி வந்தனர்.விவசாயம் செழிக்க அனைவரும் மும்மத இறைவழிபாடு நடத்தினர். பின்னர் அமைச்சர் பன்னீர்செல்வம் தமிழகத்திற்கு தண்ணீர் வரும் சுரங்க வாய்க்கால் பகுதியிலுள்ள ஷட்டரை இயக்கி, வினாடிக்கு 200 கன அடிவீதம் தண்ணீர் திறந்து விட்டார்.

## இறால் ஏற்றுமதி அதிகரிப்பு



**சென்னை**: கடல் சார் உணவுப் பொருட்கள் 9.84 லட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, கடல் சார் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் லீனா நாயர் கூறுகையில், கடந்த நிதியாண்டில் (2013-2-14) இறால் உள்ளிட்ட கடல் சார் உணவுப் பொருட்கள் 9.84 லட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.30,213.26 கோடி. இது எப்போதும் இல்லாத சாதனை. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 5.98 சதவீதம் அதிகம். கடல் சார் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில் பதப்படுத்தி அனுப்பப்படும் இறால் வகை முக்கிய பங்களிக்கிறது. இது மட்டுமே 64.12 சதவீத அளவிற்கு வருமானம் தந்துள்ளது' என்றார்.

**மஞ்சளுக்கு கூடுதல் விலை**



**திருச்செங்கோடு**: நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு ஆத்தூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 2,020 மூட்டை மஞ்சள் கொண்டு வந்தனர். இவற்றை வியாபாரிகள் ரூ. 89 லட்சத்துக்கு ஏலம் எடுத்தனர். இதில், விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.5,669 முதல் ரூ.7,200 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.4,602 முதல் ரூ.6,655 வரையிலும், பனங்காளி ரகம் ரூ.9,500 முதல் ரூ.12,699 வரை விலைபோனது. குவிண்டாலுக்கு ரூ.200 முதல் ரூ.500 வரை விவசாயிகளுக்கு அதிக விலை கிடைத்தது.

**சர்க்கரை விலை சரிந்தது**



**மும்பை:** மும்பையிலுள்ள வாசி சர்க்கரை மண்டியில் வெள்ளிக்கிழமை நடந்த பரிவர்த்தனையின்போது சர்க்கரை விலை குறைந்ததால் உற்பத்தியாளர்கள்

கவலையடைந்தாக வியாபாரிகள் தெரிவித்தனர். தேவை குறைந்ததாலும், மகாராஷ்டிராவில் உள்ள சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய பணத்தை கொடுக்க வேண்டிய கட்டாயத்தாலும் தங்களிடம் இருந்த இருப்பு சர்க்கரையை குறைவான விலைக்கு விற்றது. இதன் காரணமாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20 முதல் ரூ.60 வரை குறைந்து விற்றது. வியாழக்கிழமை மண்டிக்கு சுமார் 58 லாரிகளில் சர்க்கரை மூட்டை வந்தது. தரத்திற்கு ஏற்ப ஒரு மூட்டை ரூ.2,880 முதல் ரூ.3,140 வரை விலை போனதாகவும் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பு</u>**



**தேனி,**

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளின் முதல் போக பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மதகை திறந்து வைத்தார்.

தண்ணீர் திறப்பு

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களின் நீர் ஆதாரமாக முல்லைப் பெரியாறு அணை திகழ்கிறது. இந்த அணையில் இருந்து கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளின் முதல் போக பாசனத்திற்காக 200 கன அடி வீதம், 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அவருடைய உத்தரவுப்படி முல்லைப் பெரியாறு அணையில் இருந்து முதல் போக பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. தண்ணீர் திறக்கப்படுவதை முன்னிட்டு கேரள மாநிலம், குமுளி அருகே தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் மதகு அருகே உள்ள துர்கா கோவிலில் நேற்று காலை சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. அதன்பிறகு மதகு பகுதியிலும் சிறப்பு பூஜை செய்து தீபாராதனை காட்டப்பட்டது. பின்னர் தமிழக நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், மதகிற்கான பொத்தானை அழுத்தி, தண்ணீரை திறந்து விட்டார். அதனை தொடர்ந்து அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி மற்றும் அரசு அதிகாரிகள் மதகு வழியாக திறந்து விடப்பட்ட தண்ணீரில் மலர் தூவி வழிபட்டனர்.

14,707 ஏக்கர் நிலங்களில் பாசனம்

பின்னர் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறியதாவது:-

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து முதல் போக பாசனத்திற்காக முதல்-அமைச்சரின் உத்தரவுப்படி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. இதன் மூலம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 14 ஆயிரத்து 707 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். எனவே குறுகிய கால பயிர்களை நடவு செய்தும், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தியும் விவசாயிகள் பயன்பெற வேண்டும். இருபோக சாகுபடி நடைபெற வேண்டும் என்பதால் விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை உபயோகிக்க வேண்டும். பயிர்களில் பூச்சி நோய் கட்டுப்படுத்த தேவையான மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. குறுவை நெல் சாகுபடிக்காக யூரியா, டி.ஏ.பி., காம்ப்ளக்ஸ், பொட்டாஸ் போன்ற உரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உரக்கடைகளில் தேவையான அளவு இருப்பு

வைக்கப்பட்டு உள்ளது. இதனை வாங்கி நல்ல முறையில் பயன்படுத்தி குறுவை சாகுபடியில் விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

கலந்து கொண்டவர்கள்

இந்நிகழ்ச்சியில் தேனி பாராளுமன்ற உறுப்பினர் பார்த்திபன், ஆண்டிப்பட்டி எம்.எல்.ஏ. தங்கதமிழ்செல்வன், கம்பம் நகர்மன்ற தலைவரும், மாவட்ட அ.தி.மு.க. செயலாளருமான சிவக்குமார், பெரியார் வைகை வடிநில கோட்ட மதுரை மண்டல தலைமை பொறியாளர் தமிழரசன், மேற்பார்வை பொறியாளர் ராஜேஷ், செயற்பொறியாளர் தனபாலன் மற்றும் அரசின் பல்வேறு துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று 113.80 அடியாக இருந்தது. அணையில் மொத்தம் 1,526 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. அணைக்கு வினாடிக்கு 100 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது.

**ஒரு வாரத்திற்கு பிறகு தான் வஞ்சிரம் மீன் வரத்து அதிகரிக்கும் மீன் விலை இன்னும் குறையவில்லை**



**சென்னை,**

மீன்பிடி தடைக்காலத்துக்கு பின்னர் மீன் பிடிக்க சென்ற விசை படகுகள் தற்போது கரை திரும்பி வருகின்றன. எனினும் வஞ்சிரம் மீன் வரத்து ஒரு வாரத்திற்கு பிறகு

தான் அதிகரிக்கும் என கூறுகின்றனர். தற்போது மீன் விலை இன்னும் குறையவில்லை.

30-40 சதவீதம் படகுகள்

வங்கக்கடல் பகுதியில், ஆண்டு தோறும் மீன்களின் இனப்பெருக்க காலத்தையொட்டி, 45 நாட்கள் விசைப்படகுகளில் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டு கடந்த ஏப்ரல் 15-ந் தேதி முதல், மே 29-ந் தேதி வரை வங்கக்கடல் பகுதியில் விசைப்படகுகளில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த தடைக்காலத்திற்கு பிறகு, கடந்த மே 29-ந் தேதி இரவு முதல் விசைப்படகுகள் கடலுக்குள் மீன்பிடிக்க புறப்பட்டு சென்றன. சென்னை காசிமேடு துறைமுகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுகள் உள்ளன. இதில், 30 முதல் 40 சதவீதம் விசைப்படகுகள் மீன்பிடிக்க கடலுக்குள் சென்றுள்ளன.

கணவாய், இறால், மத்தி மீன்கள்

மீன்பிடிக்க சென்ற விசைப்படகுகளில், ஆழ்கடல் பகுதிக்கு செல்லாத விசைப்படகுகள் மீன்பிடித்து விட்டு நேற்று முன்தினம் முதல் கரை திரும்பி வந்தன. இந்த விசைப்படகுகளில் மீன்பிடிக்க சென்றவர்கள் கணவாய் மீன்கள், இறால், பாறை, மத்தி மீன், அயலை மீன்கள் மட்டுமே அதிக அளவில் பிடித்து வந்தனர். தற்போது 12 முதல் 15 கிலோ கொண்ட ஒரு கூடை மத்தி மீன் 400 ரூபாய்க்கும், அதே அளவு எடையுள்ள ஒரு கூடை அயலை மீன் ஆயிரத்து 500 ரூபாய்க்கும், இறால் மீன் கிலோ 500 முதல் 700 ரூபாய்க்கும், கணவாய் மீன் கிலோ 180 முதல் 190 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பு

வஞ்சிரம் மீன், வவ்வால் மீன், சங்கரா மீன் போன்ற விலை உயர்ந்த மீன்கள் ஆழ்கடல் பகுதியில் மட்டுமே கிடைக்கும். இந்த மீன்களை பிடிப்பதற்காக ஆழ்கடல் பகுதிக்கு மீன்பிடிக்க சென்றுள்ள விசைப்படகுகள் கரை திரும்புவதற்கு குறைந்தபட்சம் 10 முதல் 15 நாட்கள் ஆகும் எனவே இன்னும் ஒரு வாரத்திற்கு பிறகு தான் வஞ்சிரம் மீன் வரத்து அதிகரிக்கும். இந்த விசைப்படகுகள் கரை

திரும்பும் போது அதிக அளவில் மீன்களை கொண்டு வரும்பட்சத்தில் மீன் விலை குறையும். தற்போது மீன் விலை தடைக்காலத்தில் இருந்த அதே அளவில் இருந்து வருகிறது. தடைக்காலத்தின் போதும், கரையோர பகுதிகளில் இரட்டை மோட்டார் பொருத்தப்பட்ட பைபர் படகுகளில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் தற்போது, வரிச்சூறை, கேரை, ஏமன் கோலா, மயில் கோலா போன்ற மீன்கள் அதிக அளவில் பிடித்து வருகின்றனர்.

<u>மீன் விலை குறையும் என எதிர்பார்ப்பு</u>

இந்த வரிச்சூறை மீன் கிலோ 52 ரூபாய்க்கும், கேரை மீன் கிலோ 80 ரூபாய்க்கும், ஏமன் கோலா, மயில் கோலா மீன்கள் கிலோ 100 முதல் 120 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆழ்கடல் பகுதிக்கு மீன்பிடிக்க சென்ற விசைப்படகுகள் கரை திரும்பும்போது, பெரிய மீன்கள் மற்றும் சிறிய மீன்களின் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 103 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.12¾ கோடி செலவில் தானிய சேமிப்பு கிடங்கு



**ஓமலூர்,**

சேலம் மாவட்டத்தில் 103 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.12 கோடியே 87 லட்சம் செலவில் தானிய சேமிப்பு கிடங்கு அமைக்கப்படுகிறது என்று அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<u>அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி</u>

காடையாம்பட்டி ஒன்றியம் கூகுட்டப்பட்டி ஊராட்சி தின்னப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நபார்டு திட்டத்தின் உள்கட்டமைப்பு நிதியின் கீழ் ரூ.12 லட்சத்து 87 ஆயிரம் செலவில் தானிய சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கான பணி தொடக்க விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சீனிவாசன் வரவேற்றார். சேலம் பன்னீர்செல்வம் எம்.பி. முன்னிலை வகித்தார். விழாவில் அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பூமி பூஜை செய்து தானிய சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கான பணியை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

முதல்-அமைச்சர் ஜெயலலிதா தமிழகத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு கடன் சங்கம் மூலம் ஏழை, எளிய விவசாய மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன், அவர்களுக்கு தேவையான உரம், பூச்சி மருந்து போன்றவை தரமான முறையில் கிடைக்க நடவடிக்கை எடுத்து உள்ளார். கடன் வழங்குவது மட்டுமல்லாமல் தமிழகத்திலேயே சேலம் மத்திய கூட்டுறவு சங்கம் அதிகப்படியாக டெபாசிட்டினை பெற்று முதல்இடத்தை பிடித்து உள்ளது. கூட்டுறவு கடன் சங்கம் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க கொள்முதல் மற்றும் விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

<u>தானிய சேமிப்பு கிடங்கு</u>

விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளைபொருட்களை சேமித்து வைக்க தமிழகம் முழுவதும் 1044 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் தானிய சேமிப்பு கிடங்கு அமைக்க ரூ.139 கோடியே 72 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சேலம் மாவட்டத்தில் 103 கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.12 கோடியே 87 லட்சம் செலவில் தானிய சேமிப்பு கிடங்கு அமைக்கப்பட உள்ளது. இவ்வாறு அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி பேசினார். இதில் காடையாம்பட்டி ஒன்றியக்குழு தலைவர் ராணிசேகர், ஒன்றியசெயலாளர் சித்தேஸ்வரன், ஒன்றியக்குழு துணை தலைவர் மகேஸ்வரி வெங்கடேசன்,

மாவட்ட கவுன்சிலர் சுப்பிரமணியம், ஈஸ்வரி பாண்டுரங் கன், கூகுட்டப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அருவிசெல்வி சக்திவேல், ஒன்றிய கவுன்சிலர் மாதையன், கூட்டுறவு சங்க தலைவர் மாரப்பன் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தடைகாலம் முடிந்து, கடலுக்கு சென்ற மீனவர் வலையில் 75 கிலோ எடையுள்ள மீன் சிக்கியது



தரங்கம்பாடி அருகே குட்டியாண்டியூர் மீனவர் வலையில் சிக்கிய 75 கிலோ எடை

**பொறையாறு,**

மீன்பிடித்தடை காலம் முடிந்து, கடலுக்கு சென்ற மீனவர் வலையில் 75 கிலோ எடையுள்ள மீன் சிக்கியது.

மீன்பிடித்தடை காலம்

மீன்கள் இனப்பெருக்க காலத்தை முன்னிட்டு விசைபடகு மீனவர்கள் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடிக்க ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15-ந் தேதி முதல் மே 29-ந் தேதி வரை தடை விதிக்கப்பட்டு வருவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு 45 நாட்கள் மீன்ப்பிடிதடைகாலம் அமலில் இருந்தது. இதனால் தரங்கம்பாடி, சந்திரபாடி, குட்டியாண்டியூர், புதுப்பேட்டை, பெருமாள்பேட்டை, மாணிக்கபங்கு, தாழம்பேட்டை, சின்னங்குடி மற்றும் சின்னமேடு உள்ளிட்ட சுற்றுபகுதியை சேர்ந்த விசைபடகு மற்றும் இழுவைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க

செல்லவில்லை. அப்போது மீனவர்கள், தங்களது விசை மற்றும் இழுவை படகுகளை காரைக்கால், நாகப்பட்டினம் மற்றும் ஜெகதாபட்டினம் பகுதியில் பராமரிப்பு பணிக்கு அனுப்பி இருந்தனர். மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாததால் கடல் மீன்களை விரும்பி சாப்பிடும் அசைவ பிரியர்கள், கவலை அடைந்து இருந்தனர்.

மீன்கள்வரத்து அதிகரிப்பு

இந்த நிலையில் மீன்பிடி தடைக்காலம் கடந்த 29-ந் தேதியுடன் நிறைபெற்றதையொட்டி மீனவர்கள் மகிழ்ச்சியுடன் கடலின் ஆழமான பகுதிக்கு சென்று மீன்களை பிடிக்க சென்றனர். அப்போது மீனவர்களின் வலையில் வாளை, வஞ்சிரம், கொடுவா காக்கை, காலா, சுறா, பண்ணா, கத்தாளை, கண்டல், செங்காலா, கனவா, சீலா, கிளங்கான், நண்டு, மாஸ், திருக்கை, வவ்வால் போன்ற ஆழ் கடல்வாழ் மீன்கள் பிடித்து வந்தனர். தற்போது மாஸ் கேரை மீன்கள் வரத்து அதிகமாக காணப்படுகிறது. குட்டியாண்டியூர் பகுதியைச்சேர்ந்த மீனவர் வலையில் 75கிலோ எடையுள்ள மீன் சிக்கியது. ஒரு கேரை மீன் 50 கிலோ முதல் 100 கிலோ வரை உள்ளது. மீன்பிடித் தடைக்காலம் முடிந்ததால் மீனவர்களும், மீன் விற்பனை செய்யும் பெண்களும், மீன் வியாபாரிகளும், அசைவ பிரியர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மானாவாரி நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஊட்டமேற்றிய தொழு உரம் பயன்படுத்த வேண்டும் அதிகாரிகள் ஆலோசனை**



**இலுப்பூர்,**

புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் மானாவாரி நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஊட்ட மேற்றிய தொழு உரம் பயன்படுத்த வேண்டும் என்று அதிகாரிகள் ஆலோசனை தெரிவித் துள்ளனர். இது குறித்து புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜஹான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குனர் சாந்தி மற்றும் வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித் துள்ளதாவது;-

ஊட்டமேற்றிய தொழு உரம்

புதுக்கோட்டை மாவட் டத்தில் தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய் வதற்கு விவசாயிகள் தயாராகி வருகிறார்கள். மானாவாரி நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஊட்டமேற்றிய தொழு உரம் தயார் செய்து பயன்படுத்த வேண்டும். பொதுவாக தொழு உரம் இடுவதால் மண்ணின் அமைப்பு, தொகுப்பு போன்ற பவுதீக குணங்கள் மேம்படுத்தப் படுகிறது. இதனால், மண்ணின் ஈரத்தை நிலைநிறுத்தும் தன்மை அதிகரிப்பதுடன் பயன்தரக்கூடிய நுண்ணு யிர்கள் பன்மடங்கு பெருகி அதிக மகசூல் பெற வழிவகை செய்யப்படுகிறது. தொழு உரத்தை மானாவாரி நிலக் கடலைக்கு ஊட்டமேற்றி பயன்படுத்தினால் கூடுதல் மகசூல் பெற வாய்ப்புள்ளது.

தயார் செய்யும் முறை

மானாவாரிப் பயிர்கள் மண்ணிலுள்ள ஈரத்தை உறிஞ்சுவதற்கு நல்ல வேர் வளர்ச்சி மிகவும் அவசியம். வேர் வளர்ச்சிக்கு மணிச்சத்து மிகவும் அவசியம். மானாவாரி நிலங்களில் மண்ணில் ஈரத்தன்மை குறைவாக உள்ளதால் மண்ணில் இடும் மணிச்சத்தானது உடனடியாக பயிருக்குக் கிடைக்கும் வகையில் விரைவில் மாற்றப் படுவதில்லை. மானா வாரிப் பயிர்களுக்கு மணிச் சத்தினை பயிரின் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்தி லேயே கிடைக்கச் செய்திட உள்ள தொழில்நுட்பமே ஊட்ட மேற்றிய தொழு உரம் ஆகும். மானாவாரி நிலக்கடலை விதைப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக 300 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் ஒரு ஏக்கர் மானாவாரி நிலக்கடலைக்குத் தேவைப்படும் 25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களைச் சேர்த்து நன்கு கலக்க வேண்டும்.

இவ்வாறு கலக்கியப் பின்பு குவியலாக்கி மழை மற்றும் வெயில் இல்லாத இடத்தில் குவியலை நன்கு தட்டி இறுக்கிவிட வேண்டும். பின்பு இக்குவியலை களிமண் கொண்டு பூசி காற்றுப் புகாதவாறு மூட்டம் செய்து வைக்க வேண்டும். இதனை ஒரு மாத காலத்திற்கு வைத்திருக்க வேண்டும்.

கூடுதல் மகசூல்

மானாவாரி நிலக்கடலை சாகுபடிக்கு கடைசி உழவிற்கு முன்பு இக்குவியலை எடுத்து அதனுடன் 9 கிலோ யூரியாவையும், 80 கிலோ ஜிப்சத்தையும் நன்கு கலந்து கடைசி உழவு செய்து விதைப்புச் செய்ய வேண்டும். எனவே, புதுக்கோட்டை மாவட்ட மானாவாரி நிலக் கடலை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் இப்போதே மேற்கண்ட முறையில் ஊட்ட மேற்றிய தொழு உரத்தினைத் தயார் செய்து அதனைப் பயன்படுத்தி நல்ல மகசூலைப் பெற்று கூடுதல் லாபம் பெறலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## திண்டுக்கல் மார்க்கெட்டில் ஒரே நாளில் 10 டன் மல்லிகை பூக்கள் விற்பனை



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மார்க்கெட்டில் நேற்று ஒரே நாளில் 10 டன் மல்லிகை பூக்கள் விற்பனை ஆனது. வரத்து அதிகரித்தால் விலை கடும் வீழ்ச்சி அடைந்தது.

மல்லிகை பூக்கள்

திண்டுக்கல் சுற்றுவட்டார பகுதிகளில் மலர் சாகுபடி அதிக அளவில் நடைபெறுகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் பூக்கள், திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு பருவமழை பெய்யாததால் மலர் சாகுபடி பெருமளவில் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைந்து, விலை உயர்ந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் பரவலான அளவு கோடைமழை பெய்தது. இதனால் தோட்டங்களில் கருகும் நிலையில் இருந்த மல்லிகை செடிகள் தளிர்விட்டு, பூத்து குலுங்க தொடங்கின. இதன் விளைவாக திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் நேற்று மல்லிகை பூக்களை, விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வந்து குவித்தனர்.

<u>10 டன் வரத்து</u>

திருமண விழாக்கள் அதிகம் நடைபெறும் மாதம் என்பதால் விவசாயிகள் ஆர்வமுடன் பூக்களை கொண்டு வந்தனர். நேற்று ஒரே நாளில் மட்டும் திண்டுக்கல்லில் சுமார் 10 டன் அளவுக்கு மல்லிகை பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. ஆனால், ஒரே நேரத்தில் அளவுக்கு அதிகமான மல்லிகை பூக்கள் வந்ததால், விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்தது.

நேற்று ஒருகிலோ மல்லிகை பூ ரூ.30–க்கு மட்டுமே விற்பனை ஆனது. சிலர் பூக்களை விற்பனை செய்ய முடியாமல் தவித்தனர். இதற்கிடையே வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பூக்களை வாங்க தொடங்கினர். அதன்பிறகே விவசாயிகளும், வியாபாரிகளும் ஓரளவு நிம்மதி பெருமூச்சு விட்டனர். நேற்று மட்டும் திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் 10 டன் பூக்கள் விற்பனை ஆனது. அதேபோல் துளசியும் அதிகமான விற்பனை வந்ததால் கட்டு ரூ.2–க்கு விற்றது.

<u>சம்பங்கி ரூ.500</u>

அதேநேரம் திருமண சீசன் என்பதால் மாலை கட்டுவதற்கு அதிகமாக பயன்படும் சம்பங்கி பூக்கள் மற்றும் கனகாம்பரம் பூக்களின் வரத்து குறைவாக இருந்தது. இதனால் சம்பங்கி கிலோ ரூ.500–க்கும், கனகாம்பரம் ரூ.400 முதல் 500 வரையும், சாதிப்பூ ரூ.120–க்கும், முல்லைப்பூ ரூ.80–க்கும், கோழிக்கொண்டை ரூ.70–க்கும்,

செண்டுமல்லி ரூ40–க்கும், வாடாமல்லி ரூ.30–க்கும், மரிக்கொழுந்து ஒரு கட்டு ரூ.10–க்கும், அரளிப்பூ ரூ.15–க்கும் விற்பனை ஆனது.

இதுகுறித்து பூ வியாபாரி ஒருவர் கூறுகையில், கோடைமழை காரணமாக மல்லிகை பூக்கள் வரத்து அதிகமாக இருக்கிறது. இதனால் நல்ல விலை கிடைக்க வில்லை. ஒரு கிலோ பூ பறிக்க கூலியே ரூ.30 கொடுக்க வேண்டியது உள்ளது. ஆனால், மல்லிகை பூக்கள் நேற்று அந்த விலையில் தான் விற்றன. விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர். இன்னும் ஒரு வாரத்திற்கு மல்லிகை பூக்கள் அதிகமாக இருக்கும். அதன்பின்னர் வரத்து குறைந்து விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது, என்றார்.

**விலையில்லா மாடு, ஆடுகள் மூலம் கிராமப்புறங்களில் பொருளாதார வளர்ச்சி அமைச்சர் சுந்தர்ராஜன் பேச்சு**



**பரமக்குடி**,

முதல்-அமைச்சர் வழங் கிய விலையில்லா மாடு, ஆடுகள் மூலம் கிராமப் புறங்களில் பொருளா தார வளர்ச்சி ஏற்பட்டுள் ளதாக அமைச்சர் சுந்தர் ராஜன் தெரிவித்தார்.

காால்நடை முகாம்

தமிழக அரசு சார்பில் கிராமப்புறங்களில் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகள் தங்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத் தும் வகையில் விலையில்லா கறவை மாடு மற்றும் 4 வெள் ளாடுகள் வழங்கப்பட்டுள் ளன. இவைகளுக்கு கால்ந டைத்துறையின் சார்பில் இலவச மருத்துவ முகாம் பரமக்குடி அருகே உள்ள மேலாய்குடி கிராமத்தில் நடைபெற்றது. முகாமுக்கு அமைச்சர் சுந்தர்ராஜன் தலைமை தாங்கினார். அ.தி. மு.க. மாவட்ட செயலாளர் முனியசாமி, மேலாய்குடி ஊராட்சி தலைவர் மீனாள் ஆகியோர் முன்னிலை வகித் தனர். கால்நடைத்துறை மண் டல இணை இயக்குனர் கோவர்த்தனன் வரவேற் றார்.

பின்பு அமைச்சர் சுந்தர்ரா ஜன் முகாமை தொடங்கி வைத்து பேசியதாவது:- தமிழ கத்தில் 3வது முறையாக முதல் -அமைச்சராக பொறுப்பேற் றுள்ள ஜெயலலிதா மக்க ளால் நான், மக்களுக்காக நான் என்ற அடிப்படையில் பல்வேறு சிறப்பான திட்டங் களை வழங்கி வருகிறார். இதில் குறிப்பாக கிராமப்புறங் களில் வசிக்கும் மக்கள் பொரு ளாதாரத்திலும், வாழ்வாதா ரத் திலும் முன்னேற வேண் டும் என்பதற்காக கால் நடை பராமரிப்பு துறை சார்பில் ஒரு குடும்பத்திற்கு 4 வெள்ளா டுகளும், அல்லது ஒரு கறவை மாடும் வழங்கப்படுகிறது. இவ்வாறு கடந்த 3 ஆண்டுக ளில் தமிழகத்தில் ரூ.126 கோடி மதிப்பீட்டில் 36,000 கறவை மாடுகளும், ரூ.508 கோடி மதிப்பீட்டில் 4 லட்சம் பேருக்கு தலா 4 வெள்ளாடு கள் வீதம் 14 லட்சம் வெள் ளாடுகளும் வழங்கப்பட்டுள் ளது.

<u>பொருளாதார வளர்ச்சி</u>

ராமநாதபுரம் மாவட்டத் தில் ரூ.8 கோடியே 33 லட் சம் மதிப்பீட்டில் 2,100 கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள் ளது. இந்த பசுக்கள் 1,668 கன்றுகளை ஈன்றுள்ளது. இந்த கறவை பசுக்கள் மூலம் தினமும் 12,630 லிட்டர் பால் கூடுதலாக உற்பத்தியாகிறது. மேலும் இதன் மூலம் 52 பால் கூட்டுறவு சங்கங்கள் தொடங் கப்பட்டுள்ளது. இதேபோல ரூ.13 கோடியே 4 லட்சம் மதிப் பீட்டில் 10,036 குடும்பங்க ளுக்கு 40,144 வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆடுகள் ஈன்றெடுக்கும் குட்டி கள் மூலம் ஏழை, எளிய மக் களின் வறுமை ஒழிந்து பொரு ளாதார வளர்ச்சி பெற்று அவர்கள் சுபிட்சமாக வாழ் கின்றனர். விலையில்லா ஆடு, மாடு பெற்ற பயனாளி களுக்கு பயிற்சி அளிக்கப்படு கிறது. மாவட்டத்தில் உள்ள

அனைத்து குடிநீர் ஊரணி களும் தூர்வாரப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் தண் ணீரை சேமித்து சிக்கனமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். முகாமில் பார்த்திபனூர் ஊராட்சி தலைவர் தங்கவேல், அண்ணா தொழிற்சங்க பொருளாளர் நாகராஜன், மாவட்ட கவுன்சிலர் ரஜினி காந்த், இலக்கிய அணி செய லா ளர் திலகர் உள்பட பலர் கலந்து கொண்டனர். கால் நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் கனியப்பன் நன்றி கூறினார். முகாமில் ஏராள மான வெள்ளாடுகளை பரி சோதனைக்காக அழைத்து வந்தனர். அப்போது தேவராஜ் என்பவரது வெள்ளாடு திடீ ரென குட்டி ஈன்றது. இத னைக்கண்ட அமைச்சர் சுந் தர்ராஜன் உடனடியாக கால் நடை மருத்துவரை அழைத்து அதனை நன்கு கவனிக்கும் படி கூறினார்.

**<u>45 நாள் தடை காலத்திற்கு பிறகு அதிக மீன்பாடு கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சி</u>**



**ராமேசுவரம்,**

தடைக்காலத்திற்கு பிறகு கடலுக்கு சென்ற மீனவர்கள் அதிக மீன்பாடு கிடைத்ததால் மகிழ்ச்சியடைந்தனர்.

தடைக்காலம்

கடந்த ஏப்ரல் 15–ந்தேதி முதல் மே 29–ந் தேதி வரை மீன்கள் இனப் பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு விசைப்படகுகள் 45 நாட் கள் மீன்பிடிப்பதற்கு தமிழக அரசு தடை விதித்திருந்தது. இந்த நிலையில் தடை காலம் முடிவடைந்த தொடர்ந்து ராமேசுவரத்தில் நேற்று முன்தினம் காலை சுமார் 770க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 3,000த்துக்கும் மேபட்ட மீனவர்கள் கடலுக்கு சென்றனர். இவர்கள் மீன்பிடித்து விட்டு நேற்று காலை கரை திரும்பினர். மீனவர்கள் எதிர்பார்த்தபடி ஒவ்வொரு படகிலும் சராசரியாக 100 முதல் 150 கிலோ வரை இரால் மீன்கள் பிடிபட்டிருந்தன. இது தவிர நண்டு, கணவாய் மீன்கள் தலா 45 கிலோ வீதம் கிடைத்தது. இதனால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். பிடிபட்ட மீன்களை தரம் பிரிப்பதில் மீனவர்கள் மும்முரமாக ஈடுபட்டனர். ஒரு சில படகுகளில் ராட்சத திருக்கை மீன்கள் பிடிபட்டன. சுமார் 45 நாட்கள் வெறிச்சோடிக்கிடந்த ராமேசுவரம் கடற்கரை நேற்று களைகட்டியது. இதுகுறித்து மீனவர் சேசுராஜா என்பவர் கூறும்போது, 45 நாட்கள் தடைக்காலத்திற்கு பிறகு மீன்பிடிக்க சென்ற ஒவ்வொரு விசைப் படகிலும் சராசரியாக 100 முதல் 150 கிலோ வரை இரால் மீன்கள் கிடைத்துள்ளது. இலங்கை கடற்படை பிரச்சினை இருந்ததால் நிம்மதியாக மீன்பிடிக்க முடியவில்லை. இத னால் குறைந்தளவே மீன்பிடிக்க முடிந்தது என்று தெரிவித்தார். இதே போல் மண்டபத் தில் இருந்து பாக்ஜலசந்தி கடல் பகுதியில் 500 படகுகளில் 2,000த்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடித்து விட்டு நேற்று கரை திரும்பினார்கள். சராசரியாக ஒவ்வொரு பட கிலும் 80 முதல் 100 கிலோ வரை இறால் மீன்கள் கிடைத்துள்ளன.

தொண்டி

இதேபோல தொண்டி, நம்புதாளை, சோழி யக்குடி, லாஞ:சியடி, மோர்ப்பண்ணை உள் ளிட்ட கடலோர கிராமங்களில் சுமார் 300க் கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு சென்றனர். தடைக்காலத்திற்கு பிறகு மீன்பிடிக்க சென்ற முதல் நாளில் ஒவ்வொரு படகி லும் சுமார் 100 முதல் 130 கிலோ வரை கணவாய், 50 முதல் 100 கிலோ வரை இரால் மீன்கள், 10 முதல் 30 கிலோ வரை நண்டு, மற்றும் 100 கிலோ வரை இதர மீன்கள் கிடைத் துள்ளன. நல்ல மீன்பாடு கிடைத்துள்ளதால் மீன வர் கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த 45 நாட்களாக

மீன் கள் கிடைக்காமல் அவதிப்பட்டு வந்த மீன் பிரியர்கள் நேற்று ஆர்வமுடன் வந்து மீன்களை குறைந்த விலைக்கு வாங்கிச் சென்றனர். இதுபற்றி சோழியக்குடி மீனவர் குமரேசன் கூறியதாவது– 45 நாளுக்கு பிறகு முதல் முறையாக கடலுக்கு சென்ற எங் களுக்கு நல்ல மீன்பாடு கிடைத்தது. தடைக்காலத்துக்கு முன்பு ஒரு கிலோ இரால் ரூ.750 வரையும், கணவாய் ரூ.140 வரையும் கம்பெனிகள் விலை கொடுத்து வாங்கின. ஆனால் தற்போது அதிக மீன்வரத்து காரணமாக குறைந்த விலைக் குத்தான் மீன்களை வாங்குவார்கள். நாங்கள் என்னதான் உயிரை பணயம் வைத்து கடலுக்கு சென்று மீன்களை பிடித்து வந்தாலும், விலையை நிர்ணயிப்பது பெரிய பெரிய கம் பெனிகள் தான். இன்னும் ஒரு வாரத்திற்கு நல்ல மீன்பாடு இருக்கும். ஆனால் அதற்கு பிறகு மீன்கள் கிடைக்குமா? என்து சந்தேகம் தான். ஒரு விசைப்படகு கடலுக்கு மீன்பிடிக்க சென்றால் ரூ.15,000 வரை செலவாகிறது. நாங்கள் பிடித்து வரும் மீன்களுக்கு நல்ல விலை கிடைத்தால் மட்டுமே செலவு கட்டுபடியாகும். இவ்வாறு அவர் கூறினார்.

## 1¼ லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது வேளாண்மை இணை இயக்குனர் தகவல்

**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் 1 லட் சத்து 24 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது என்று வேளாண்மை இணை இயக்குனர் தெய் வேந்திரன் கூறியுள்ளார்.

அறிக்கை

கரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தெய்வேந்திரன் ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

கரூர் மாவட்ட ஆண்டு சராசரி மழை அளவு 652.2 மில்லி மீட்டர் ஆகும். இவற் றில் கோடை பருவத்தில் பெய்ய வேண்டிய சராசரி ம¬ ழயான 109.5 மில்லி மீட்டருக்கு 111 மில்லி மீட்டர் கிடைத்து உள்ளது. இந்த மழை நீரை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்யலாம். கோடை உழவு செய்வதால் மழை நீர் ஓடி

வீணாகாமல் அந்த நிலத்திலேயே சேமிக்கப் படுகிறது. மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. மண்ணிற் குள் இருக்கும் கூட்டுப்புழுக்கள் அழிக்கப்படுகிறது. தென் மேற்கு பருவ காலத் தில் பெய்கிற மழையை கொண்டு பருவத்திலேயே மானாவாரி பயிர்களை சாகுபடி செய்து பயன் அடைய லாம்.

வாடகை தொகை

கோடை உழவு பணிக்கு வேளாண்மை பொறியியல் துறை மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது. பொறியியல் துறை யில் உழுவை எந்திரம் வாடகை யாக மணிக்கு ரூ.390, மண் தள்ளும் எந்திரம் மணிக்கு ரூ.950-ம் வசூலிக்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வாடகை தொகையை முன் கூட்டியே செலுத்தி தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். தமிழக முதல்-அமைச்சர் 2-ம் பசுமை புரட்சியை ஏற்படுத்தி உணவு தானிய உற்பத்தியை 2 மடங் காக உயர்த்த உத்தரவிட்டு உள்ளார். அதே போன்று விவசாயிகள் வருமானத்தை தற்போதைய நிலையில் இருந்து 2 அல்லது 3 மடங்காக அதிகரிக்கவும் பல சிறப்பு திட்டங்களை அறிவித்து வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தியதன் பயனாக 2013-14-ம் ஆண்டு கரூர் மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி 1 லட்சத்து 21 ஆயிரம் மெட்ரிக் டன் இலக்கிற்கு, 1 லட்சத்து 24 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து சாதனை அடைந்து உள்ளது. நடப்பு பருவத்திற்கு தேவைப்படும் நெல் விதைகள் 190 மெட்ரிக் டன். இதே போன்று சிறு தானிய விதை கள் 3 மெட்ரிக் டன். பயறு வகை விதைகள் 14 மெட்ரிக் டன், எண்ணெய் வித்து விதைகள் 20 மெட்ரிக் டன். இவை அனைத்தும் தேவை யான அளவிற்கு அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. இவற்றை மானிய விலையில் பெற்று விவசாயிகள் பயன் பெறலாம்.

பண்ணை குட்டை

இதே போன்று முதல்-அமைச்சரின் சிறப்பு திட்டமான மழை நீரை சேமிக்க பண்ணை குட்டைகள் அமைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு செயல் படுத்தியதில் இது வரை கரூர் மாவட்டத்தில் 388 பண் ணைக்குட்டைகள் இலவச

மாக விவசாயிகளுக்கு அமைத்து கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த பண்ணை குட்டைகளில் மழை நீர் தேங்குவதால் விவசாயிகள் தோட்டத்தில் உள்ள கிணறு களில் நீர் மட்டம் உயரும். இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி இதுவரை பண் ணை குட்டை அமைக்காத விவசாயிகள் தங்களது பெய ரை வேளாண்மை துறை களப் பணியாளர்களிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதே போன்று ஆழ் குழாய் கிணற்றில் இருந்து நீரை இறைப்பதற்கு 5 எச்.பி. திறன் கொண்ட ஏ.சி. நீர் மூழ்கி பம்புகள் பொறியியல் துறை மூலம் அமைத்து கொடுக்க அரசு உத்தரவிட்டு உள்ளது. சோலார் பம்பு 5 எச்.பி. ஏ.சி.நீர் மூழ்கி பம்புகள் அமைக்க ஆகும் செலவு ரூ.4 லட்சம். இதில் 80 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மீதி ரூ.80 ஆயிரம் மட்டும் விவசாயிகள் செலுத்த வேண்டும். சோலார் பம்பு மானியத்தில் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பெயர், முகவரி, சிட் டா, அடங்கல், நில வரைபடம், அடையாள அட்டை நகலுடன் விண்ணப்பத்தை வேளாண்மை பொறியியல் துறை அல்லது, வேளாண்மை துறையில் வழங்கலாம். முன்னுரிமை அடிப்படையில் சோலார் பம்பு அமைக்க ஆணை வழங்கப்படும். இவ் வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

**<u>கார் சாகுபடிக்காக மணிமுத்தாறு அணையை அமைச்சர் செந்தூர் பாண்டியன் திறந்து வைத்தார்</u>**



**அம்பை,**

கார் சாகுபடிக்காக மணிமுத்தாறு அணையை அமைச்சர் செந்தூர் பாண்டியன் நேற்று திறந்து வைத்தார்.

<u>மணிமுத்தாறு அணை திறப்பு</u>

தமிழக முதல்– அமைச்சர் உத்தரவுப்படி கார் சாகுபடிக்காக மணிமுத்தாறு அணை நேற்று திறக்கப்பட்டது. நெல்லை மாவட்டம் அம்பை வட்டம் ஜமீன்சிங்கம்பட்டி, அயன்சிங்கம்பட்டி, வைராவிகுளம், தெற்கு பாப்பான்குளம், மூலச்சி மற்றும் தெற்கு கல்லிடைக்குறிச்சி கிராமங்கள் பயன்பெறுகின்றன. அணையின் பெருங்கால் வாயின் மூலம் 2 ஆயிரத்து 756 ஏக்கர் நிலம் பாசனம் பெறும்.

பாசனத்துக்காக மணிமுத்தாறு அணையை அமைச்சர் செந்தூர் பாண்டியன் திறந்து வைத்தார். பின்னர் அவர் கூறுகையில், தற்போது அணையின் நீர்மட்டம் 67.39 அடியாக உள்ளது. இன்று (நேற்று) முதல் 105 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. 40 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. தண்ணீர் வரத்தை பொறுத்து தண்ணீர் திறந்துவிடப்படும் அளவுகள் மாறுபடும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகரித்திட வேண்டும், என்று கூறினார்.

<u>யார்– யார்?</u>

நிகழ்ச்சியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் ஆர்.முருகையாபாண்டியன், மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன், எம்.பி.க்கள் முத்துக்கருப்பன், விஜிலா சத்யானந்த், பிரபாகரன், வசந்திமுருகேசன், இசக்கிசுப்பையா எம்.எல்.ஏ., கூட்டுறவு இணைய தலைவர் சக்திவேல்முருகன், மணிமுத்தாறு நகர பஞ்சாயத்து தலைவர் சிவன்பாபு, அம்பை நகரசபை துணை தலைவர் மாரிமுத்து, தாமிரபரணி கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், உதவி செயற்பொறியாளர் குமாரசாமி, உதவி பொறியாளர் மாயன்முருகன், தொகுதி செயலாளர் தெய்வநாயகம், நகர செயலாளர்கள் அறிவழகன், பலவேசம், பிராங்களின், ஸ்டீபன் முத்தையா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தடைக்காலம் நீங்கியதால் மீன்கள் வரத்து அதிகரிப்பு: மீன்களின் விலை குறைய வாய்ப்பு



மீன்பிடி தடைக் காலம் முடிந்து தற்போதுதான் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றுள்ளதால், குறைவான மீன்களே மார்க்கெட்டில் விற்பனைக்கு உள்ளன. இடம்: சிந்தாதிரிப்பேட்டை மீன் மார்க்கெட். படம்: ம.பிரபு

மீன்பிடி தடைக்காலம் நீங்கியதையடுத்து, மீன்களின் வரத்து அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. இதனால் மீன்களின் விலை படிப்படியாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டுதோறும் கிழக்கு கடற்கரை பகுதிகளில் மீன்வளத்தை பெருக்குவதற்காக, விசைப் படகுகளில் மீன்பிடிக்க 45 நாட்கள் தடை விதிக்கப்படுகிறது. இதன்படி, இந்த ஆண்டுக்கான மீன்பிடி தடைக்காலம் கடந்த ஏப்ரல் மாதம் 15-ம் தேதி தொடங்கியது. இந்தத் தடை கடந்த வியாழக்கிழமை முடிந்தது. இதையடுத்து, வியாழக்கிழமை நள்ளிரவு மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்களில் சிலர் சனிக்கிழமை கரை திரும்பினர். இதையடுத்து, மீன்வரத்து அதிகரித்துள்ளது. இது குறித்து, காசிமேட்டை சேர்ந்த மீனவர் மகேந்திரன்

கூறுகையில், மீன்பிடி தடைக்காலம் நீங்கியதை யடுத்து, மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். இதில், சில மீனவர்கள் சனிக்கிழமை கரை திரும்பினர். சிலர் ஞாயிற்றுக்கிழமை கரை திரும்புகின்றனர். மேலும், சிலர் பத்து நாட்களுக்குள் கரை திரும்புவர்.

இதன் காரணமாக, மீன் வரத்து அதிகரித்துள்ளது. மீன்பிடித் தடைக் காலத்தில் வஞ்சிரம் மீன் கிலோ ஒன்றுக்கு ரூ.800 முதல் ரூ.1,000 வரை விற்பனையானது. அவற்றின் விலை இனி ரூ.400 முதல் ரூ.500 வரை குறையும். இதேபோல், மத்தி மீன் கிலோ ரூ.100 வரை விற்பனையானது. அவற்றின் விலை இனி ரூ.60 வரை குறையும்.

இதேபோல், கிலோ ஒன்றுக்கு ரூ.500 வரை விற்ற இறால் மீன், இனி ரூ.250 வரை குறையக் கூடும். மீன்பிடி தடைக்காலத்தில் ரூ.600 வரை விலை உயர்ந்த வவ்வால் மீன்கள் இனிமேல் ரூ.400 முதல் ரூ.500க்கு கிடைக்கும். இதேபோல், மற்ற மீன்களின் விலையும் படிப்படியாக குறையும்” என்றார்.